ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரிய பணிச்சேரி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.7.25 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட குடிநீர் (RO Plant) சுத்திகரிப்பு நிலையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி, துணைத் தலைவர் உமா மகேஸ்வரி மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் உள்ளனர்.

40 கி.மீ. வேகத்திற்கு மேல்

வாகனங்களை ஓட்டினால் அபராதம்!

சென்னை,ஜூன்.21-

சென்னையில் 40 கி.மீ. வேகத்திற்கு மேல் வாகனங்களை ஓட்டினால் அபராதம் விரைவில் விதிக்கப்படும் என்று காவல் துறை ஆணையர் சங்கர் ஜிவால் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களை தடுக்க மணிக்கு 40 கி.மீ. வேகம் என்ற கட்டுப்பாடு விதிக்கப்படவுள்ளது. வேகமாக செல்லும் வாகனங்களைக் கண்டறிய 20 இடங்களில் கண்காணிப்பு கருவி பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 12 விடியோக்களை உருவாக்கி உள்ளோம். போக்குவரத்து காவர்களின் பணிச்சுமையை குறைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று சங்கர் ஜிவால் தெரிவித்தார்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., தலைமை!

அம்பத்தூர் வடக்குப் பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம்!

டி.ஆர்.பாலு எம்.பி. - கே.எஸ்.அழகிரி - கே.சுப்புராயன் எம்.பி. - சே.ம.மதிவதனி சிறப்புரை!

சென்னை, ஜூன் 21-

சென்னை கிழக்கு மாவட்டம், அம்பத்தூர் வடக்கு பகுதியில் கலைஞர்-100, 6வது நிகழ்ச்சியாக "கடமை சூரியன்! காலத்தின் நாயகன்!" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (21.06.2023 - புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில், சென்னை, அம்பத்தூர், மண்ணூர் பேட்டை, மேனாம்பேடு ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்துநிலையம் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான ஜோசப் சாமுவேல் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, 7வது மண்டலக்குழுத் தலைவரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான பி.கே.மூர்த்தி, பகுதிக் கழக செயலாளர்கள் டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் மற்றும் வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., மருத்துவர். ஜி.சாந்தகுமாரி எம்.சி., எல்.பி.எப். மோகன், டாக்டர்.ஏ.பி.மணிகண்டன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி., ஜெ.பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மா.பச்சையப்பன், அ.செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், வி.ரவிந்திரன், பூ.வீரா, வெ.ராதாகிருஷ்ணன், மு.ரகு, த.கண்ணபிரான், பி.வி. மூர்த்தி, பொன்.நவராஜ் ரவி, எம்.குணசேகரன், ப.மதி. ஆ.இரா.அருண், கோ.சேகர் லால், க.ஜீவா, எஸ்.பி.அரிகிருஷ்ணன், மா.குப்புசாமி, எம். ஹரிகிருஷ்ணன் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத்தலைவருமான டி.ஆர்.பாலு, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் கே.எஸ். அழகிரி, வலது கம்யூனிஸ்ட் மாநில துணைச் செயலாளர் கே.சுப்புராயன், திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சே.ம.மதிவதனி ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

மேலும், இக்கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், சட்டமன்ற உறுப்பினர் - பா. தாயகம் கவி, அ.வெற்றி அழகன், இ.பரந்தாமன், ப.ரங்கநாதன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் 86வது வட்டக்கழக செயலாளர் எம்.கமல் எம்.சி. நன்றி கூறுகிறார்.

கீழையூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர்

ஆ.தாமஸ் ஆல்வா எடிசன் சகோதரர் மணவிழா!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

நாகை.ஜூன். 21-

.நாகை மாவட்டம் கீழையூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் ஏ.எல். டயானாசர்மிளா ஆகியோரது சகோதரரும் நாகை மாவட்டம் கீழ்வேளூர் தாலுகா வேளாங்கண்ணி பி.ஆரோக்கியராஜ் -ஜெயமேரி இணையர்களின் மகன் ஏ.மரியசூசைநிக்சன், திருவாரூர் மாவட்டம் திருவாரூர் காப்பனாமங்கலம் எஸ்.வி.ஜெயராஜ் - ஹெல்ன்ரோஸி இணையர்களின் மகள் ஜெ.பெபின் ஆகியோர் திருமணம் வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பேராலயத்திலும், வேளாங்கண்ணி ஆர்ச் அருகே இ.சி.ஆர். மெயின் ரோடு பாலத்தடி அருகே அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அரங்கில் நாளை (22.06.2023 - வியாழன்) பிற்பகல் 12 மணிக்கு நடைபெறுகிறது.

'திருமண விழாவில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் வரவேற்புரையாற்றுகிறார்.

கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மணமக்கள் ஏ.மரிய சூசைநிக்சன்- ஜெ.பெபின் திருமணத்தை கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமைத் தாங்கி நடத்தி வைக்கிறார்.

திருமண விழாவில் மாநில கிறிஸ்துவ நல்லெண்ண இயக்க தலைவர் கோ.இருதயராஜ், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம்கலை, திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., புதுக்கோட்டை மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ராமலிங்கம், தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கோவி.செழியன் எம்.எல்.ஏ., உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ், சட்ட மன்ற உறுப்பினர்கள் கீழ்வேளூர் நாகை மாலி, சீர்காழி எம். பன்னீர்செல்வம், நாகை முகமதுஷநவா, ந.தியாகராஜன், காரைக்கால் மாநில அமைப்பாளர் ஏ.எம்.எச். நாஜீம், சென்னை மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் கே.எஸ். இரவிச்சந்திரன், மாநில இலக்கிய அணி செயலாளர் கவிதைப்பித்தன், கழக செய்தி தொடர்பாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ந.இளையராஜா, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க. அன்பழகன், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் என். வி.காமராஜ், கழக விவசாய அணி துணைத்தலைவர் எஸ். கே. வேதரத்தினம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நாகை அ.அசோகன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் வி.மாரிமுத்து, மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் ஜி.பழனிச்சாமி,

மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் இரா.சங்கர், மாநில விவசாயத் தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், கூட்டணிக் கட்சி மாவட்ட தலைவர், செயலாளர்கள் திராவிட கழகம் நெப்போலியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சிவகுருபாண்டியன், ம.தி.மு.க. வெ.ஸ்ரீதரன், காங்கிரஸ் கட்சி ஆர்.என். அமிர்தராஜா, சிறுபான்மை நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் மு.சாகுல்அமீது, இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் அ.சீனிவாசன், விடுதலைச் சிறுத்தை கட்சி கதிர்நிலவன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.ராஜேந்திரன், க.மறைமலை, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி. மனோகரன், மாவட்டக் கழகக் கழக அவைத் தலைவர் ப.செல்வம், துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம் மாவட்டக் கழகப் பொருளாளர் மு. லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல்.எஸ்.ஈ. பழனியப்பன், எம்.பன்னீர் செல்வம்,உமாசெந்தாமரை செல்வன், கோ.சி.குமார், எம்.பாண்டியன், இல.பழனியப்பன், எஸ்.வி.டி.சார்லஸ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மகா.குமார், ஆர்.டி.எஸ்.சரவணன், செல்வ.செங்குட்டுவன், சிக்கல் என்.ஆனந்த், கே. பழனியப்பபன், என்.சதாசிவம், உதயம் எம்.முருகையன், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ.புகழேந்தி, எம்.ஆர். செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், முகமது சுல்தான், சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், துணைத்தலைவர் ஆர். அஜிதா, ஒன்றியக் குழு தலைவர்கள் செல்வராணிஞானசேகரன், வாசுகிநாகராஜன், ஆர். ஜி.தமிழரசி, பேரூராட்சி தலைவர்கள் ஏ.எல்.டயானாசர்மிளா, இந்திராகாந்தி சேகர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகசெயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் நன்றி கூறுகிறார்.

சேலம் மாவட்டம் அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், 32 ஊராட்சிகளுக்கு அதிநவீன மின்கல வண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஒன்றியக் குழு தலைவர் ஹேமலதா விஜயகுமார் முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் கலந்து கொண்டு மின்கல வண்டியை ஊராட்சி மன்ற நிர்வாகத்திடம் வழங்கினார்.இதில் தெற்கு ஒன்றியச் செயலாளர் விஜயகுமார், வடக்கு ஒன்றியச் செயலாளர் ரத்தினவேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருவேரங்கன், வெங்கட்ரமணன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம். ஒன்றிய அவைத் தலைவர் ராயப்பன், மாவட்டப் பிரதிநிதிகள் அகரம் ராஜேந்திரன், குமரவேலு, சின்னத்தம்பி, ஒன்றிய துணைச் செயலாளர்கள், செந்தில், காந்திமதி, ஆறுமுகம், ஹரி, பேரூராட்சித் தலைவர் பாபு, துணைத் தலைவர் செல்வ சூரியா சேதுபதி, ஒன்றிய பொருளாளர் கோபால், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சங்கர், சுப்பிரமணி, நாகராஜ், முருகன் குணசேகரன், சின்னதாயி பொண்ணுசாமி, மனோசூரியன், ரோஷினி, சுமதி குப்புசாமி, செல்வி சேகர்,காசிலிங்கம், ஆவரணம், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் பாரதி ஜெயக்குமார், ப்ரீத்தி மோகன், பாலையா கவுண்டர், பரமேஸ்வரன், சாந்தி பெருமாள், உஷா ராஜகோபால் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நூற்றாண்டு விழாக் காணும்

முத்தமிழறிஞர் கலைஞரின் புகழ் இமயம்போல் உயர்ந்து நிற்கும்!



தன் வாழ்நாளில் எழுதிக் குவித்த இலக்கியக் கருவூலங்களுக்கு பெற்ற பணத்தைக் கொண்டு அறக்கட்டளைகள் நிறுவி, அதன்மூலம் நலிந்தோர் மருத்துவம் மற்றும் கல்வி உதவி பெறவும், முற்போக்கு - பகுத்தறிவு எழுத்தாளர்களுக்கும், தமிழ் செம்மொழி ஆய்வுக்கு சீரியமுறையில் தொண்டாற்றும் அறிஞர்களுக்கும் பொற்கிழி வழங்கி தமிழ் வளர்ச்சிக்கு தொண்டாற்றிய ஒப்புயர்வற்ற தமிழினத் தலைவர் கலைஞர் ஆவார். உண்மை ! வெறும் புகழ்ச்சியில்லை.

1. "கலைஞர் அறக்கட்டளை" வைப்பு நிதி ரூ. 5 கோடி நலிந்தோர் மருத்துவம் மற்றும் கல்வி உதவித்தொகை (வைப்பு நிதியில் பெறும் வட்டியிலிருந்து வழங்கப்படுகிறது.) சுமார் 18 ஆண்டுகளில் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் பெற்ற உதவித் தொகை.. ரூ. 5 கோடியே 73 இலட்சத்து 90 ஆயிரம் ஆகும்.

2. "கலைஞர் கருணாநிதி பொற்கிழி அறக்கட்டளை" 2007 ஆம் ஆண்டுமுதல் ரூ.1 கோடி வைப்பு நிதி தென்னிந்திய விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் மூலம். இளைஞர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவிடும் பகுத்தறிவு சிந்தனைகளை வளர்க்கும்சி றந்த நூல்களை எழுதி வெளியிடும் பத்து எழுத்தாளர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் வீதம் பொற்கிழி ஆண்டு தோறும் அரசுநடத்தும் புத்தகத் திருவிழாவில் வழங்கப்பட்டு வருகிறது.

3." கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை" 2008 ஆம் ஆண்டு வைப்பு நிதி ரூ.1 கோடி (ஒன்றிய அரசின்) செம்மொழி தமிழாய்வு மையம் மூலம்) "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது" ஆண்டுதோறும் ஒருவருக்கு ரூ.10 இலட்சம், தகுதிச் சான்றும் வழங்கப்படுகிறது.

கோவை மாநகரில் 2010 சூன் 23 முதல் 27வரை உலகே கண்டு வியந்து பாராட்டிய வண்ணம் முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற "உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் ஒன்றிய (இந்திய) குடியரசுத் தலைவர் மேதகு பிரதிபா பாட்டில் அவர்கள், பின்லாந்த் நாட்டு அறிஞர் பேராசிரியர் அஸ்கோ பர்போலா அவர்களுக்கு

"கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது" ரூ.10 இலட்சம் பொற்கிழி வழங்கி சிறப்பித்தார்கள். தகுதிச் சான்றிதழை இனமானப் பேராசிரியர் அவர்கள் வழங்கி னார்கள். (சிந்து வெளி எழுத்துக்கள் ஹரப்பா எழுத்துக்கள் ஐரோப்பிய மொழியல்ல, ஆரிய மொழியும் அன்று. "தென்னிந்திய திராவிட மொழியே" என்று ஆய்ந்து அறிந்து, உலகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் தெளிவு படுத்திய அறிஞர்தான் பேராசிரியர் அஸ்கோ பர்போலா ஆவார்.)

" தன் உழைப்பால் பெற்ற வருமானத்தில் ரூ.7 கோடிக்கு அறக்கட்டளைகள் நிறவி, தமிழ் சமுதாயத்திற்கு உதவிக் கரம் நீட்டிய உலகில் ஒரே தலைவர் கலைஞர் ஒருவரே!" நின் புகழ் தமிழ் நிலம் உள்ளளவும் இமயம்போல் உயர்ந்து நிற்கும்.

க.வை. இராமகிருட்டிணன்
செயலாளர்
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம்
மதுரை.

பூண்டி கலைவாணன் தலைமையில்

திருவாரூர் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்பு!

கொட்டும் மழையிலும் நள்ளிரவில் திரண்ட மக்கள் வெள்ளம்!

திருவாரூர், ஜூன் 21.

திருவாரூர் மாவட்டத்திற்கு வந்திருந்த தமிழ்நாடு முதல்வர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் நள்ளிரவில் திருவாரூர் கீழவீதியில் திரண்டுநின்று பூண்டி கே. கலைவாணன் தலைமையில் பிரமாண்ட வரவேற்பளித்தனர்.மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றனர் .

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள "கலைஞர் கோட்டம்" திறப்புவிழாவிற்கும் அரசின் நலத்திட்டங்களின் ஆய்வுகளுக்காகவும் திருவாரூர் வந்துள்ள தமிழ் நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 18.06.2023நள்ளிரவு திருவாரூர் வந்தடைந்தார். அப்போது மண்ணின் மைந்தரை வரவேற்க திருவாரூர் கீழவீதியில் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., தலைமையில் ஏராளமானோர் திரண்டு நின்று வாழ்த்து முழக்கமிட்டு வரவேற்றனர். அனைவரின் வரவேற்பையும் தனது பயணக்களைப்பையும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்களின் அன்பு மழையில் நனைந்து முதலவர் முக.ஸ்டாலின் வரவேற்பினை ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (19.06.2023) காலை கீழவீதியில்உள்ள தனது இல்லத்தில் இருந்து புறப்பட்ட முதல்வர் முக.ஸ்டாலின் வாயிலில் திரண்டிருந்த மக்களை சந்தித்து பேசியதோடு, மனுக்களையும் பெற்றுக்கொண்டார்.பின்னர் கலைஞர் அவர்களின் தாயார் நினைவிடத்தின் வழியே பயணித்து காட்டூர் கலைஞர் கோட்டத்தின் கட்டுமான பணிகளை ஆய்வு செய்து அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். அடுத்து அங்கு நடைபெற இருக்கும் பொதுக்கூட்ட அரங்கை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முதல்வரின் இந்த பயணத்தில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர்கள் எ.வ.வேலு, டி.ஆர்.பி. ராஜா, மாவட்டச் செயலாளர் பூண்டி. கலைவாணன், தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி எ. கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் - தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியப் பெருந்தலைவர் புலிவலம் ஏ.தேவா, நாகை அ.அசோகன், நாகை இல. மேகநாதன், எஸ்.கே. வேதரத்தினம், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், மற்றும் மாவட்ட ஒன்றிய நகரபேரூர் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடையநல்லூர் கு.இராஜாமணி
ஜூன் 21 (2009)

தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற 'கறுப்புச் சட்டை மாநாட்டில்' பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்" என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.